அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2022

# தமிழ்

# ஆண்டு 11

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: 04.06.2022** | **பக்கங்கள்: 20** |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை
   1. முப்பது
   2. இருபது
   3. தொண்ணூறு
   4. நூற்றுப்பதினாறு

2. இளவேனிற் காலத்தில் வீசும் காற்று
   1. தென்றல்
   2. கோடை
   3. வாடை
   4. கொண்டல்

3. காலம் மாறிமாறி வரும் என்னும் கருத்தை விளக்கும் பழமொழி
   1. இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை
   2. அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது
   3. உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லாது
   4. இக்கரைக்கு அக்கரை பச்சை

4. நாளை புத்தகக் கண்காட்சியில் புதிய நூல்கள் வாங்குவேன். இச்சொல்லியத்தில் தோன்றாது நிற்கும் சொல்லிய உறுப்பு
   1. எழுவாய்
   2. பயனிலை
   3. செயப்படுபொருள்
   4. அடைமொழி

5. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்னும் கவிதையை எழுதியவர்
   1. கவிஞர் நாவண்ணன்
   2. கவிஞர் காசி ஆனந்தன்
   3. கவிஞர் நு.ஃமான்
   4. து. உருத்திரமூர்த்தி

6. கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருள்களில் வருவது
   1. ஆறாம் வேற்றுமை
   2. ஐந்தாம் வேற்றுமை
   3. மூன்றாம் வேற்றுமை
   4. ஏழாம் வேற்றுமை

1 2 3 4

7. புத்துணர்ச்சி என்ற சொல்லின் புணர்ச்சி வடிவம்
   1. புதுமை + உணர்ச்சி
   2. புதிய + உணர்ச்சி
   3. புது + உணர்ச்சி
   4. புத் + உணர்ச்சி

8. நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற இடம்
   1. பாரிசு
   2. கோலாலம்பூர்
   3. யாழ்ப்பாணம்
   4. சென்னை

9. அடைமழையினால் நதியில் வெள்ளம் கங்குகரையின்றிப் பாய்ந்தது. கங்குகரை என்பது
   1. இணைமொழி
   2. அடுக்குத்தொடர்
   3. இரட்டைக்கிளவி
   4. அடுக்கிடுக்குத்தொடர்

10. மீட்டு என்ற வினையடியின் தொழிற்பெயர் வடிவம்
   1. மீட்டியவள்
   2. மீட்டிய
   3. மீட்டி
   4. மீட்டுதல்

11. குரங்கு அன்ன மனம் என்ற உவமையணியின் பொதுத்தன்மை
   1. வளைந்து கொடுத்தல்
   2. நிலையற்றுத் தாவுதல்
   3. ஆறுதல் அளித்தல்
   4. நிலையாக இருத்தல்

12. "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" எனக் கூறியவர்
   1. மகாகவி பாரதியார்
   2. பாவேந்தர் பாரதிதாசன்
   3. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்
   4. பாவலரேறு பெருஞ்சித்திரனார்

1 2 3 4

13. பலாவின் இளையது கன்று போல தென்னையின் இளையது
    1. குட்டி
    2. பிள்ளை
    3. நாற்று
    4. வடலி

14. அத்து, அற்று, அம் என்பன
    1. இடைநிலைகள்
    2. விகுதிகள்
    3. வேற்றுமை உருபுகள்
    4. சாரியைகள்

15. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
    1. ஐந்திணை நாற்பது
    2. கலித்தொகை
    3. திருமுருகாற்றுப்படை
    4. புறநானூறு

16. தளபதியின் ஆலோசனையை வீரர்கள் ஏற்றனர். ஆலோசனை என்பதன் தமிழ்ச்சொல்
    1. வாழ்த்து
    2. மதியுரை
    3. ஆணை
    4. ஆசீர்வாதம்

17. யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை முதன்முதலில் தொடக்கி வைத்தவர்
    1. கா.மு. செல்லப்பா
    2. சாம் சபாபதி
    3. வண. லோங் அடிகளார்
    4. எஸ். ஆர். இரங்கநாதன்

18. குதிரை காற்றிலும் வேகமாக ஓடியது. இச்சொல்லியம்
    1. உருவக அணி
    2. தற்குறிப்பேற்ற அணி
    3. உயர்வுநவிற்சி அணி
    4. சிலேடை அணி

19. மன்னன் வட்டுடை அணிந்து போருக்குச் சென்றார். வட்டுடை என்பது
    1. மென்றொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி
    2. இடைத்தொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி
    3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி
    4. வன்றொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி

1 2 3 4

20. ஔவையார் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்
   1. காளமேகப்புலவர்
   2. இரட்டையர்
   3. தாயுமானவர்
   4. ஒட்டக்கூத்தர்

21. மகிழினி சீருடை அணிந்து பள்ளிக்குச் சென்றாள். இச்சொல்லியம்
   1. தனிச்சொல்லியம்
   2. தொடர்ச்சொல்லியம்
   3. கலப்புச்சொல்லியம்
   4. சொற்றொடர்

22. அள்ளி இறைத்தல் என்னும் மரபுச்சொற்றொடரின் பொருள்
   1. அளவுக்கு அதிகமாகக் கொடுத்தல்
   2. ஏமாற்றுதல்
   3. மிக மகிழ்தல்
   4. அணியம் செய்தல்

23. பழந்தமிழர் நிலங்களை நான்காக வகுத்தனர். வகுத்தனர் என்பது
   1. அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை
   2. உயர்திணை, ஆண்பால், ஒருமை
   3. உயர்திணை, பலர்பால், பன்மை
   4. அஃறிணை, பலவின்பால், பன்மை

24. பண்டைய புலவர்கள் திருக்குறளைப் புகழ்ந்து பாடிய பாடல்களின் தொகுப்பு
   1. எட்டுத்தொகை
   2. திருவள்ளுவமாலை
   3. குறுந்தொகை
   4. ஆசாரக்கோவை

25. தமிழர் மீதான சிங்கள அரசின் முதலாவது திட்டமிட்ட பெரும் இன அழிப்புத் தாக்குதல்
   1. கல்லோயாப் படுகொலைகள்
   2. யூலைப் படுகொலைகள்
   3. மலையகப் படுகொலைகள்
   4. கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள்

(25 X 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது யாது?

______________________________

______________________________

2. யாழ்ப்பாணப் பொதுநூலகம் எந்த ஆண்டில், யாரால் எரியூட்டப்பட்டது?

______________________________

______________________________

3. நாயக்கர் காலத்து உரையாசிரியர் இருவரின் பெயர்களை எழுதுக.

______________________________

______________________________

4. கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதைத் தொகுப்புகளுள் இரண்டை எழுதுக.

______________________________

______________________________

5. இரண்டாம் வேற்றுமை அழித்தல், அடைதல் பொருள்களுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுச் சொல்லியம் எழுதுக.

அழித்தல்: ______________________________

அடைதல்: ______________________________

6. பண்புத்தொகை, வினைத்தொகை என்பவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

பண்புத்தொகை: ______________________________

வினைத்தொகை: ______________________________

7. வென்றாள் என்ற சொல்லின் பகுதியையும் இடைநிலையையும் கண்டறிந்து எழுதுக.

பகுதி: ______________ இடைநிலை: ______________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. மறப்போமா உங்களை……

2.



(5 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

நாம் வாழும் இவ்வுலகம் இயற்கை வளங்களால் நிறைந்துள்ளது. இவ்வளங்கள் மாந்தருக்கு எண்ணற்ற நன்மைகளை அள்ளி வழங்குகின்றன. இயற்கையின் அழகைக் கண்டுகளிப்பதற்கு எமது இரு கண்களும் போதாது. எம் தாயகத்தின் அழகே தனியழகுதான். வானளாவ நெடிது உயர்ந்து வளர்ந்த மரங்களைக் கொண்ட காடுகள் என்னே! அவற்றிடையே சலசல எனச் சிந்துபாடி ஓடிடும் சிற்றோடைகள், அருவிகளின் அழகுதான் என்ன? இவை மட்டுமா? 'குக்கூ' எனக் கூவும் குயில்கள்; அவற்றின் இசைக்கேற்ப நாட்டியமாடும் மயில்கள். ஆகா! எத்தனை அழகு. காடுகள் மட்டுமல்ல எம் வயல் நிலங்களும் அழகானவை. பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் காட்சியளிக்கும் வயல் நிலங்களைக் காணக் கண்கள் கோடி வேண்டும். காட்டுக்குள் பறவைகளின் இசைவிழா; வயல் நிலங்களோ உழவரின் நடவுப்பாடல்கள், அரிவிவெட்டுப் பாடல்களின் இசையால் நிறைந்திருக்கும். எமது கடல்களும் வளத்தில் குறைந்தவையல்ல. அவை கடல்படு செல்வங்களான முத்துகளையும் மீன்களையும் அள்ளித் தருகின்றன. தாயகத்தின் இந்த வளங்கள் எல்லாம் இன்று அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரச படையினரால் பாதுகாப்பு அரண்களை அமைப்பதற்கும் படைத்தளங்களை அமைப்பதற்கும் எமது காடுகள் அழிக்கப்படுகின்றன. வீடு கட்டுவதற்காகவும் வேறு கட்டுமானப் பணிகளுக்காகவும் மணல் அகழப்படுகிறது. குடியேற்றத்திட்டங்கள், படைமுகாம் அமைத்தல் போன்றவற்றிற்காகத் தாயகத்தின் பயன்விளை நிலங்கள் அரசினால் கையகப்படுத்தப்படுகின்றன. எம் வளங்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை எமக்கு இருப்பதை நாம் என்றும் மறக்கக் கூடாது.

(5 புள்ளிகள்)

5. தரப்பட்டுள்ள பந்தியை உமது வாழிட மொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஆங்கிலம்:**

From the beginning, humans were in need of moving from one place to another. In ancient times, humans travelled on foot. Thus, it took them a long time to reach short distances. Then, they trained the animals and travel on them. After that, they locked them in carts and carried their belongings with them. Later, because of the upliftment of humans' knowledge, they invented many means of transportation. Thus, it is possible to reach long distances quickly. However, the smoke emitted by these vehicles pollutes the environment. Therefore, we will use these vehicles limitedly.

**யேர்மனி:**

Seit Beginn der Zeit haben Menschen die Notwendigkeit, sich von einem Ort zum anderen Ort fortzubewegen. Damals sind Menschen Reisen zu Fuß angetreten. So benötigten sie bereits für kurze Wege viel Zeit. Später haben sie Nutztiere trainiert, damit sie auf diese reiten können. Nach einiger Zeit haben sie Nutztiere an Wagen angeschlossen und transportierten ihre benötigten Gegenstände. Im Laufe der Zeit hat der Mensch mit seinem Wissenszuwachs einige Transportfahrzeuge erfunden. So können auch weitentfernte Orte schnell erreicht werden. Jedoch wird die Umwelt durch die Abgase der Fahrzeuge verschmutzt. Deshalb sollten wir die Fahrzeuge in Maßen verwenden.

**நோர்வே:**

Helt siden begynnelsen har menneskene hatt behov for å flytte på seg fra et sted til et annet. Før i tiden måtte menneskene reise med å gå til fots. Derfor tok det lang tid til å gå korte avstander. Senere trente de dyr som de red på. Deretter festet de vogner på dyrene og fraktet nødvendige ting. I ettertid har menneskene brukt sin kunnskap til å oppfinne forskjellige transportmidler. Derfor kan man reise langt på kort tid. Men transport middelenes utslipp skaper forurensning. Derfor må vi begrense bruken av transportmidler.

**இத்தாலி:**

Fin dall’inizio l’uomo ha avuto il bisogno di spostarsi da un posto all’altro. In passato, gli uomini viaggiavano camminando. Per questo motivo impiegavano molto tempo per raggiungere distanze brevi. In seguito, addestrando gli animali viaggiavano su di essi. Nel corso del tempo, trasportavano le cose che necessitavano legando gli animali ai carri. A lungo andare, grazie allo sviluppo della sua conoscenza l’uomo riuscì ad inventare diversi mezzi di trasporto. Grazie a questo è possibile raggiungere luoghi lontani velocemente. Tuttavia, a causa degli smog emessi da questi mezzi l’ambiente si sta inquinando. Quindi, noi dobbiamo utilizzare i mezzi con misura.

**நெதர்லாந்து:**

Vanaf het begin moesten onze voorouders zich al van de ene plaats naar het andere verplaatsen .vroeger reisden onze voorouders te voet. daardoor kostte het hen veel tijd om korte afstanden af te leggen. Later trainden ze de dieren en gebruikten ze de dieren als vervoersmiddel na verloop van tijd later bevestigden ze de dieren aan op karren, zodat ze hun bezittingen konden mee nemen. in de loop van jaren kon men door de ontwikkeling van hun kennis meer vervoersmiddelen ontdekken Hierdoor konden ze sneller grotere afstanden bereiken. Hoewel wordt het milieu vervuild wordt de afstoot van roken uit deze vervoersmiddelen . daarom zullen we deze met mate gebruiken.

**டென்மார்க்:**

Mennesket har fra dets begyndelse haft det behov at skulle flytte fra sted til sted. I gamle dage rejste mennesket ved at gå rundt. Det betød, at det tog dem længere tid at nå et sted. Derefter oplærte de dyrene og rejste ved at ride på dem. Med tiden satte de dyrene til vogne og rejste også med deres ting. Som tiden gik og med udviklingen opfandt mennesket flere køretøj. Med disse kunne mennesket nu også rejse langt. Dog forurenes miljøet grundet os fra disse køretøj. Vi skal bruge køretøj med omhu.

**சுவீடன்:**

Redan för tidens börjans har människan haft ett behov att förflytta sig från ett ställe till något annat. Först förflyttade sig männsikan via fots. På grund av detta tog det lång tid att förflytta sig en kort sträcka för dem. Sedan lärde man djur och red på  sig med dem. Med tidens gång monterade man vagnar och tog med sig det saker som de behövde. Med tiden så uppfann människan flera transportmedel med hjälp sin intelligens. Tack vare grund av detta kan man nå platser som finns längre bort snabbt. Men är avgaserna som dessa fordon avger miljöförstörande. Därför bör vi använda fordonen med måtta

**பின்லாந்து:**

Alkuajoista lähtien ihmisellä oli tarvetta siirtyä paikasta toiseen. Alkuaikoina ihmiset liikkuivat kävelemällä. Tämän takia heillä kesti pitkiä aikoja lyhyisiinkin matkoihin. Sen takia he opettivat eläimiä, istuivat eläinten päälle ja liikkuivat. Ajan kuuluessa he käyttivät vaunuja, eläimet vetivät vaunuja, sillä he kuljettivat tavaraa mukana. Vähän ajan kuuluessa ihmiset käyttivät heidän kykyjään ja keksivät autoja. Tämän jälkeen pitkiä matkoja on pystynyt tekemään myös lyhyellä ajalla. Mutta näiden autojen päästöjen takia ympäristö saastuu. Meidän tulisi käyttää autoja rajoitetusti.

**தமிழ்:**

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

(5 புள்ளிகள்)

**6. பின்வரும் தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. இராவண காவியம்
2. தமிழிலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம்
3. நம் அன்றாட வாழ்வில் அறிவியல்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- அறிவியலின் இன்றைய வளர்ச்சி
- எங்கள் பயன்பாட்டிலிருக்கும் கருவிகளும் அவற்றுக்குரிய துறைகளும்
- அறிவியல் வளர்ச்சியால் ஏற்படும் நன்மை, தீமைகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

உலகின் தொன்மையான மொழிகளுள் எம் தாய்மொழியாம் தமிழும் ஒன்று. தமிழ்மொழி இலக்கண இலக்கிய வளம் நிறைந்தது. இதன் இலக்கிய வளத்துக்குப் பெரிதும் காரணமாக உள்ளவை தமிழிலுள்ள காப்பியங்களே. காப்பியம் என்றால் தொடர் நிகழ்ச்சிகளைக் கொண்டு கதைப்போக்கில் அமைவது எனலாம். இவை ஒரு தலைவனுடைய வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுவதனூடாக, மக்களின் நல்வாழ்விற்கு இன்றியமையாத அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளையும் கூறுகின்றன. பின்னாளில் தண்டிலயங்காரம் என்னும் அணியிலக்கண நூல் இக்காப்பியங்களைப் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என வகைப்படுத்தியது. பாட்டுடைத் தலைவனின் வாழ்க்கையை முழுமையாகப் புனைந்து கூறும்போது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் கூறுவது பெருங்காப்பியம் என்றும் நான்கினுள் ஒன்றோ பலவோ குறையுமிடத்து, அதனைச் சிறுகாப்பியம் என்றும் வகுத்துள்ளது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை மதுரைக் கூலவணிகர் சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்டது. இது முப்பது காதைகளைக் கொண்டது. காலத்தால் முந்திய காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக்காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியான கதையாக மணிமேகலை இயற்றப்பட்டுள்ளது; கோவலன் மாதவி மகளான மணிமேகலையைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டது. இது 'உயிர்களின் பசி தீர்த்தலே மிகச் சிறந்த அறமாகும்' என்னும் உயரிய குமுக அறக்கருத்தை வலியுறுத்துகிறது.

1. மணிமேகலையை இயற்றியவர் யார்? அது எத்தனை காதைகளைக் கொண்டது? (2 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

2. பெருங்காப்பியம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

3. மணிமேகலையின் பெற்றோர் யாவர்? (1 புள்ளி)

_______________________________________________

4. காப்பியங்களை வகுத்துக் கூறிய அணியிலக்கண நூல் எது? (1 புள்ளி)

______________________________

5. அது காப்பியங்களை எவ்வாறு வகைப்படுத்தியுள்ளது? (1 புள்ளி)

______________________________

6. மணிமேகலையில் கூறப்பட்டுள்ள உயரிய குமுக அறக்கருத்து யாது? (1 புள்ளி)

______________________________

7. ஐம்பெருங்காப்பியங்களுள் காலத்தால் முந்திய காப்பியங்கள் எவை? (1 புள்ளி)

______________________________

(9 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றிற்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.**

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- வேலை வாய்ப்பு
- பணி ஓய்வு மதிப்பளிப்பு
- பணியாளர் மதிப்பளிப்பு
- நோய்த்தொற்று அறிவுறுத்தல்

1. ______________________________

கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கொரோனா நோய்த்தொற்று உலக ஒழுங்கையே புரட்டிப்போட்டது. இன்று அதிலிருந்து மெல்லமெல்ல மீண்டுகொண்டிருக்கின்றோம். இந்நோய்த்தொற்றுப் பேரிடர்க் காலத்தில் எம் பணியாளர்களில் பலர் இரவுபகல் பாராது ஓய்வின்றிப் பணியாற்றினார்கள். அவர்களின் தன்னலம் கருதாத இப்பணியைப் பாராட்டி மதிப்பளிக்கவுள்ளோம். எங்களோடு இணைந்து அவர்களைப் பெருமைப்படுத்த உங்களையும் அன்போடு அழைக்கின்றோம். மதிப்பளிப்பதற்குத் திரண்டு வாருங்கள்!

2. ________________________________

இலக்கக் (இலட்சக்) கணக்கானோரின் உயிர்களைக் காவுகொண்ட கொடிய நோய்த்தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது எமது கடமை. தற்போது நோய்த்தோற்றுப் பாதுகாப்பு விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. இருப்பினும், அகத்தியமான பொது இடங்களில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளிகளைப் பேணுதல், தொற்று நீக்கிகளைப் பயன்படுத்துதல் போன்ற நோய்த்தொற்றுப் பாதுகாப்பு நடைமுறைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடியுங்கள்! நோய்த்தொற்று ஏற்படுமிடத்து, நீங்களே உங்களைத் தனிமைப்படுத்துங்கள்! உயிர்கள் பலியாவதைத் தடுக்க முன்வாருங்கள்! சிந்தித்துச் செயலாற்றுங்கள்!

3. ________________________________

எமது மூதாளர் அன்பு இல்லத்தில் உள்ளவர்களை அன்போடும் அக்கறையோடும் பராமரிப்பதற்கு உதவியாளர்கள் தேவை. பட்டறிவு உள்ளவர்களுக்கும் நோயாளர் பராமரிப்புப் பயிற்சி பெற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். வாழிடமொழியிலும் தமிழிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். உங்கள் வாழிடநாட்டுத் தமிழ்க் கல்விக் கழகங்களின் தமிழ்மொழிக் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படும். முதியவர்களின் உடல்நலம் கவனத்தில் கொள்ளப்படுவதால், உங்கள் கொரோனாத் தடுப்பூசிச் சான்றிதழும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் எமது இல்லத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி எண்: 0045 298 61 70 இணையத்தளம் : www. anbuillam. com

(3 X 2 = 6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| மொத்தப் புள்ளிகள் | | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |